க. நாகராஜன், பட்டதாரி ஆசிரியர் (தமிழ்),
அஞ்சுகம் முத்துவேலர் அரசினர் மேல்நிலைப்பள்ளி– திருக்குவளை, நாகை மாவட்டம் – 610 204.
தொடர்புக்கு... 7598868760, 9524302724.
மின்னஞ்சல்: srinithicomputerstvr@gmail.com, nagarajangnsn@gmail.com

# காலாண்டுப் பொதுத்தேர்வு - 2015
# பத்தாம் வகுப்பு தமிழ் முதல் தாள் - விடைக்குறிப்புகள்

## பிரிவு – 1

**பகுதி – 1**

01. இ. பாரதிதாசன்
02. ஆ. திரிகடுகம், ஏலாதி
03. இ. நற்றிணை
04. இ. சொத்துரிமை
05. ஆ. பாரத ரத்னா
06. இ. பேச்சுக்கலை

**பகுதி – 2**

07. திருவாதவூர்
07. நெற்கதிர்
09. வரப்புகளாக
10. மாக்சுமுல்லர்
11. நகர்த்தும் வண்டியில்
12. பெருநோய்

**பகுதி – 3**

13. இடர் - துன்பம்
14. நாவாய் - படகு
15. இறை - தலைவன்
16. இந்து - நிலவு

**பகுதி – 4** **(17 முதல் 20 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளிருந்தால் மதிப்பெண் அளிக்கலாம்)**

17. பெரியார் எவற்றை ஏற்க மறுத்தார்?
18. குமரிக்கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி எது?
19. தமிழர்கள் எந்த நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்?
20. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட எக்கருவி பயன்படுகிறது?

## பிரிவு – 2

### பகுதி – 1

21. ❊ உயிரினும் ஓம்பப்படுவது ஒழுக்கம்
❊ ஏனெனில் அது ஒருவனுக்கு அனைத்துச் சிறப்புகளையும் தருகிறது.

22. பழியில்லா மன்னனின் இயல்புகள்:...
❊ பிறர்க்குப் பணிந்து நடப்பான் ❊ நல்வழியில் செல்வான்
❊ மாண்புடைய சான்றோர் அறிவுரைகளைப் பின்பற்றி நடப்பான்
❊ நுண்ணறிவு நூல்களை ஆராய்வான்
❊அந்நூல்கள் போற்றும்படி வாழ்வான்.

23. ❊அறம் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் ❊உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்
❊ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்.

24. வறுமையினால் ஒரு தமிழன் கல்வி கற்கவில்லை எனில், அதற்காக இங்குள்ள தமிழர் எல்லோரும் நாணிட வேண்டும்
25. வெவ்வேறு இடங்களில் வாழ்ந்தாலும் சான்றோர் என்றும் சான்றோர் பக்கமே சேர்வர்
26. அப்பூதியடிகள் திருநாவுக்கரசரிடம் கூறியது
27. அறம், பொருள், இன்பம், வீடு

## பகுதி – 2

28. இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளை தொல்காப்பியம் கூறுகிறது என்று எமினோ கூறுகிறார்.

29. ஒரு நாடு வளம் பெற வேண்டுமானால், அந்நாட்டு மக்கள்அனைவரும் ஒத்த ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும். ஒழுக்கம், கற்பு ஆகியன பெண்களுக்கு மட்டும் என்று இருக்கக் கூடாது. ஆண், பெண் என இருபாலருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும்.

30. அம்பேத்கரின் தந்தையார் இராம்ஜி சக்பால், தாயார் பீமாபாய்

31. பேச்சின் முக்கூறுகள் : எடுத்தல், தொடுத்தல், முடித்தல்

32. ஒரு மொழிப்படத்தை மற்ற மொழிகளில் மாற்றி அமைக்கும் முறைக்கு மொழிமாற்றம் என்று பெயர்.

33. பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி

34.
- × இயல், இசை, நாடகம் என முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது தமிழ்
- × அகம், புறம் என வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தது தமிழ்
- × பழமையும் பெருமையும் வாய்ந்தது
- × இறவாத இலக்கிய, இலக்கண வளங்களைக் கொண்டது தமிழ்
- × தனிநோக்கும், போக்கும் கொண்டது தமிழ்

## பிரிவு – 3

## பகுதி – 1

35. எல்லாம் உடைய பெருமானே! நான் உன்பால் பேரன்பு கொண்டதன் காரணமாக உடல் சிலிர்த்தேன்; உள்ளம் நடுங்கினேன்; நறுமணம் கமழும் உன் திருவடிகளைக் கருத்திற்கொண்டு, தலைமேல் கைகுவித்து வணங்கினேன்; கண்களில் நீர் பெருகுமாறு உள்ள வருந்த உருகினேன்; பொய்ப் பொருளை விலக்கி மெய்ப்பொருளாகிய உன்னையே நினைந்து துதித்தேன்; வெல்க வெல்க என உன் அரும்பெரும் செயல்களைப் போற்றிப் புகழ்ந்தேன். இத்தகைய ஒழுக்கத்தை நான் என்றும் கைவிடேன். எனவே, உன் அடியவர்களுள் ஒருவனாக என்னையும் ஏற்று அருள்புரிவாயாக! என மாணிக்கவாசகர் இறைவனிடம் தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறார்.

36.
- ❊ வெற்றி தரும் வேலினைத் தன் பெரிய கையில் ஏந்தி பீறிட்டு எழும் குருதி ஒழுகும் பிடர்த்தலை ஏறிய கொற்றவையும் அல்லள்;
- ❊ கன்னியர் எழுவருள் இளையவளாகிய பிடாரியும் அல்லள்;
- ❊ இறைவனை நடனமாடச் செய்த பத்ரகாளியும் அல்லள்;
- ❊ அச்சம் தரும் காட்டை தான் விரும்பும் இடமாகக் கொண்ட காளியும் அல்லள்;
- ❊ தாருகன் என்ற அசுரனின் மார்பைப் பிளந்த துர்க்கையும் அல்லள்;
- ❊ தன் கையில் பொற்சிலம்பொன்றை ஏந்தி சினம் கொண்டு, கணவனை இழந்த அப்பெண் நம் வாயிலின் முன் நிற்கிறாள் என்று வாயிற்காவலன் கண்ணகி குறித்து கூறினான்.

37.
- ❊ குகன் நம் மீது கொண்ட அன்பினால் கொண்டு வந்த பொருட்கள் சிறப்புடையன
- ❊ அமுதத்தை விடச் சிறந்தன
- ❊ தூய்மையானவை
- ❊ என் போன்றோர்க்கு உரியன
- ❊ ஆதலால் இனிமையான இப்பொருள்கள் நாம் விரும்பி உண்டதற்கு சமம் என்று விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறினான்.

38. சான்றோர் நட்புக்கு உவமையாகப் பொன்னும் பவளமும் முத்தும் மாணிக்கமும் கூறப்படுகின்றன. சான்றோர் ஒருவருக்கொருவர் தொலைவில் இருந்தாலும் தக்க சமயத்தில் ஒன்று சேர்வர். இதற்கு உவமையாய் மண்ணுக்கடியில் உள்ள பொன்னும், ஆழ்கடலில் கிட்டும் முத்தும் பவளமும், மலையில் கிட்டும் மணியும் ஒன்றுக்கொன்று நெடுந்தொலைவில் இருந்தாலும் அவை ஒன்று சேர்ந்து மாலையாய் (அணிகலன்) அமைவது கூறப்படுகிறது.

39. அரசனால் சிறப்பு அடைவது, யானை, தேர், குதிரையில் அரசர் முன் செல்வது செல்வமன்று. அது அவரவர் முன்வினைப் பயன் மட்டுமே. புகலிடம் தேடி வந்த எளியோரைக் கைவிடாமல் காக்கும் மென்மையான பண்பே செல்வம் எனச் சான்றோர் கூறுகின்றனர். இவையே தலைவனுக்குத் தோழி கூறும் செய்தி ஆகும்.

## பகுதி – 2

40. தமிழ் மொழியின் இலக்கண அமைப்பு நுண்ணிய அறிவை உண்டாக்கவல்ல தனிச்சிறப்பை உடையது
தமிழ் இலக்கணம் படிக்கப் படிக்க இன்பத்தை உண்டாக்குவது என்பார் கெல்லட்
மிகப் பழைமையான இலக்கண நூலான தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றனுக்கும் இலக்கணம் கூறுகிறது.
அகத்தியர் இவற்றோடு யாப்பும் அணியும் சேர்த்து ஐந்திலக்கணம் எழுதினார்.
தமிழர் மொழிக்கு மட்டுமின்றி அகம், புறம் என வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்துள்ளனர்.

41. **மணக்கொடை குறித்து பெரியார் கூறுவன** : தமிழர்களிடம் இன்று பரவியுள்ள பெருநோய் மணக்கொடை பெற்றோர் பலர் தம் மகனின் கல்விக்காகச் செலவு செய்வதைக் கடமையாகக் கருதாமல் அதை ஏதோ ஒரு தொழிலில் போட்ட முதலீடாகக் கருதுகின்றனர்.
அதை வட்டியும் முதலுமாகத் தம் மகனுக்கு வரப்போகின்ற மனைவி மூலம் மணக்கொடையாய்ப் பெற்றுவிடத் துடிக்கின்றனர்.
சமுதாயத்தில் ஒழுக்கமும் அன்பும் தியாக உணர்ச்சியும் ஏற்பட்டதால்தான் இக்கொடுமையை ஒழிக்க இயலும்.

42. 1908இல் எல்பின்ஸ்டன் பள்ளியில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பு
1912இல் மும்பை எல்பின்ஸ்டன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம்
1915இல் அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம்
1916இல் இலண்டனில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம்
இலண்டனில் அறிவியலில் முதுகலைப் பட்டம், பாரிஸ்டர் பட்டம்
இவையே அம்பேத்கரின் கல்வித் தகுதிகள் ஆகும்.

43. பேச்சின் தொடக்கம் நன்றாக இருக்க வேண்டும்
அவையில் இருப்போரை விளித்துச் சுருக்கமான முன்னுரையுடன் பேச்சைத் தொடங்க வேண்டும்
பேசத் தொடங்கிய ஓரிரு மணித் துளிகளில் பேசப் போகும் பொருளில் புகுந்து விடுதல் நல்லது.
தட்டுத் தடங்கலின்றிப் பேச தொடக்கமே அடித்தளமாகும்
கேட்போரைத் தன்வயப்படுத்தும் முறையில் தொடங்க வேண்டும்.

44. பண்டைத் தமிழர் கடல் வாணிகத்தில் சிறந்திருந்தனர்
பொன்னும், மணியும், முத்தும், துகிலும் கொண்டு கடல் கடந்து வாணிகம் செய்தனர்
பூம்புகார் முதலான துறைமுகப் பட்டினங்கள் வணிகர்கள் வாழும் இடங்களாக இருந்தன
கிறித்து பிறப்பதற்கு முன்பே கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஆகிய நாடுகளுக்கு அரிசி, மயில்தோகை, சந்தனம் போன்ற பொருட்களை ஏற்றுமதி செய்தனர்.
கி.மு. பத்தாம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்கு யானைதத் தந்தம், மயில்தோகை, வாசனைப் பொருட்கள் அனுப்பப்பட்டன.
சாவக நாட்டுடனும் தமிழர்களுக்கு கடல் வாணிகத் தொடர்பு இருந்தது.

## பிரிவு – 4

45. 1. நற்றிணை 2. மிளைகிழான் நல்வேட்டனார் 3. வித்து - விதை
4. அங்கண் - அம் + கண் 5. பற்பல - அடுக்குத்தொடர்

46. 1. ஒளிப்படம் எடுக்கும் முறையை 1830ஆம் ஆண்டு கண்டுபிடித்தனர்
2. ஓடும் குதிரையை இயக்கப்படமாக எடுத்தவர் எட்வர்டு மைபிரிட்சு
3. படச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தவர் ஈஸ்ட்மன்
4. இயக்கப் படத்தை வடிவமைத்தவர் பிரான்சிஸ் சென்கின்சு
5. 1894ஆம் ஆண்டு இயக்கப்படம் வடிவமைக்கப்பட்டது.

## பிரிவு – 5

## பகுதி – 1 : நெடுவினாக்கள்

47. அ) ஒழுக்கமுடைமை குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகள்: ஒழுக்கத்தின் சிறப்பு - குணமும் குற்றமும் - ஒழுக்கத்தின் விளைவு - சொல், செயல் ஆகியவற்றால் வரும் ஒழுக்கம்

ஆ) தேரா மன்னா எனக் கண்ணகி விளித்துக் கூறுவன : சோழ நாட்டின் பெருமை - சிபி மன்னன் - மனுநீதிச் சோழன் - தன் குடிப் பெருமை - முறை தவறிய மன்னன்

48. அ) செம்மொழிக்குரிய ஏதேனும் ஐந்து தகுதிப்பாடுகள் : தொன்மை - பிறமொழித் தாக்கமின்மை - தனித்தன்மை - இலக்கிய வளம் - இலக்கணச் சிறப்பு - தாய்மை

ஆ) பேச்சின் முக்கூறுகள் : - தொடக்கம் - எடுத்தல், தொடுத்தல் - இடைப்பகுதி, முடித்தல் - முடிவு

## பகுதி – 2

49. அ. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம், தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்

ஆ. எய்தற் கரிய தியைந்தக்கால், அந்நிலையே
செய்தற் கரிய செயல்

இ. மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பிஉள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றிஎன்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக் கண்டுகொள்ளே.